தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# பழங்குடியினர் வாழ்வாதார முன்னேற்றம்; சி.டி., ரிலீஸ்



கோவை வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில், பழங்குடியின மக்கள் வாழ்வாதார முன்னேற்றம் குறித்த குறும்படம் வெளியிடப்பட்டது. குறும்படத்தை கோவை மாநகராட்சி துணை கமிஷனர் சர்மிளா வெளியிட, நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானிகள் அனந்தலெட்சுமி, சூர்யபிரபா மற்றும் செங்குட்டை வாழ் பழங்குடியின பெண்கள் பெற்றுக்கொண்டனர்.

**கோவை, டிச. 3–**

கோவை வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், வனத்தை ஒட்டியுள்ள பழங்குடியின கிராமத்தில் வாழும் இருளர் பழங்குடியின மக்கள், வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பெரிதும் பங்களித்துள்ளது.

இதை தெரிவிக்கும் விதமாக, குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் வெளியீட்டு விழா, வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் நடந்தது.

மாநகராட்சி துணை கமிஷனர் சர்மிளா வெளியிட்டார். நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானிகள் அனந்தலெட்சுமி, சூர்யபிரபா மற்றும் செங்குட்டை வாழ் பழங்குடியின பெண்கள் பெற்றுக்கொண்டனர்.

வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், மரப்பயிர்களிலிருந்து கிடைக்கும் கழிவினை மூலப்பொருளாகக் கொண்டு, வேளாண் இடுபொருட்கள் தயாரிக்க இருளர் இன பெண்கள் சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சி வழங்கியுள்ளது.

இதற்கான தொழில்நுட்பத்தை வழங்கியதன் மூலம், அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு உதவியுள்ளது.

68. News in Dinamalar, 03.12.2021, Coimbatore, Development of Tribal’s Livelihoods - CD release by IFGTB.